
www.tamilarangam.net







# ஈழம்: தோல்வி கண்டதா? தோற்கடிக்கப்பட்டதா? பகுதி 2




தாமரை காருண்யன்

**காரணம் தேடும் கட்டுரைத் தொடர்**

**அங்கம் - 1. மூச்சடங்கிப் போகும் வேளை**

16.05.2009. சனிக்கிழமை. மாலை 5 மணி. முள்ளிவாய்க்கால் பகுதி.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் பெருந்தொகையான போராளிகள் அவசர அவசரமாக தமது இராணுவ உடை களைந்து, சாதாரண பொது மக்கள் உடைக்கு மாறிக் கொண்டிருந்தனர்.

மாற்றுடையில்லாத போராளிகள் பொது மக்களிடம் இரவலாக உடையைக் கேட்டு வாங்கி, தமது இராணுவச் சீருடையைக் களைந்து வீசிவிட்டு பொது மக்களாக தம்மை மாற்றிக் கொண்டிருந்தனர்.

சயனைட் குப்பிகளையும் தூர வீசியெறிந்தனர். தம் வசமிருந்த ஆயுதங்களையும் குழி தோண்டிப் புதைத்தனர். சிலர் அவற்றை ஆங்காங்கிருந்த சிறு புதர்களுக்குள் மறைத்து வீசினர்.

இவ்வாறு பொது மக்களாகத் தம்மை மாற்றிக் கொண்ட போராளிகள், இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியினை நோக்கி அணியணியாக நகர்ந்து கொண்டிருந்த மக்கள் கூட்டத்தினருடன் இணைந்து கொள்கின்றனர்.

பெருந்தொகையான புலிகளும் தமது உயிரைப் பாதுகாத்துக் கொள்ள, முள்ளி வாய்க்கால் பகுதியினை விட்டு மக்களோடு மக்களாக வெளியேறிக் கொள்கின்றனர்

'நான் இறுதிவரை நின்று போராடுவதாக முடிவெடுத்துள்ளேன். முற்றுகையை உடைத்து வெளியேற முயற்சி செய்வேன். நீங்களும் முற்றுகையை உடைத்து வெளியேற முயலுங்கள். இல்லையேல் உங்கள் உங்கள் முடிவுகளை நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள்' என விடுதலைப்புலிகளின் முக்கிய தளபதிகளுக்குத் தலைவர் பிரபாகரன் 16.05.2009 அன்று அறிவுறுத்துகிறார்.

இத் தகவல் போராளிகளுக்கு மத்தியில் பரவுகிறது. இதன் பின்னர் போராளிகளில் ஒரு தரப்பினர் எடுத்த முடிவுகள், அவர்களை இராணுவத்தினரிடம் மக்களோடு மக்களாக கொண்டு போய்ச் சேர்த்தன.

இது நடைபெற்றுக் கொண்டிருக்கையில் மேலும் பெரும் தொகைப் போராளிகள் களமுனையில் தொடர்ந்தும் போராடிக் கொண்டிருந்தனர். முற்றுகையை உடைத்துத் தப்புவதற்குரிய வழிவகைகளையும் ஆராய்ந்து கொண்டிருந்தனர்.

முற்றுகை மிக இறுக்கமாக இருந்தது. மிகப் பெருந்தொகையான இராணுவத்தினர் பல அடுக்கு வளையங்களாக முள்ளிவாய்க்கால் பகுதியினைச் சுற்றிவளைத்திருந்தனர்.

சீனாவிலிருந்து புதிதாய் இறக்கப்பட்டிருந்த 500 இராணுவ டாங்கிகள் இப் பகுதியைச் சுற்றி நிறுத்தப்பட்டிருந்தன. முற்றுகையை உடைப்பதானால் பல அடுக்கு வளையங்களை உடைத்தாக வேண்டும். இது சாத்தியமான விடயமாக இருக்கவில்லை. அவ்வாறு உடைத்து வெளியேறினால்கூட, ஏதோ ஒரு வகையில் இராணுவக் குகைக்குள் நுழையும் சூழலே பெரிதும் நிலவியது.

தமது கைளிலிருந்த ஆயுதங்களை விட – தாம் அமைத்திருந்த பாதுகாப்பரண்களை விட - ஒப்பீட்டளவில் பெரும் பாதுகாப்புக் கவசமாக விளங்கிக் கொண்டிருந்த மக்கள் வெளியேறிக் கொண்டிருக்க – உயிர் தப்புவது எனும் தெரிவைத் தவிர்த்து களமுனையில் அவர்கள் நின்று கொண்டிருந்தனர்.

இன்னும் ஒரு நாளாவது தம்முடன் நிற்குமாறு வெளியேறிக் கொண்டிருந்த பொது மக்களிடம் இப் போராளிகள் கோரிக்கை விடுக்கின்றனர். தமது உயிர் காக்கும் அவசரத்தில் ஓடிக் கொண்டிருந்த மக்கள் அவர்கள் கோரிக்கைக்கு பெரிதும் செவிசாய்க்கவில்லை.

இருந்தும் குழந்தைகள் உட்பட போராளிக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் பலர் வெளியேற மனமின்றித் தவித்து நிற்கின்றனர்.

சன சமுத்திர நீர் வெறியேற்றப்பட்டுவிட, போராளி மீன்கள் நீரின்றித் தவித்து நின்றன.

சிறிலங்காப்படைகளின் எறிகணைகள் தொடர்ச்சியாக விழ்ந்து எரிமலைக் குழம்பாக அனல் கக்கிக் கொண்டிருந்தன.

**10.05.2009. ஒரு ஞாயிற்றுக்கிழமை. மதிய நேரம்.**

விடுதலைப்புலிகளின் அனைத்துலகத் தொடர்பகப் பொறுப்பாளர் கஸ்ரோ அவர்கள், முள்ளி வாய்க்கால் பகுதியிலிருந்து புலம் பெயர் தமிழ் செயற்பாட்டாளர்களில் முக்கியமான சிலருடன் அவசரமாக உரையாடுகின்றார்.

செய்மதி மூலம் பெறப்பட்ட internet இணைப்பின் ஊடாக skype தொடர்பியினூடாக முள்ளிவாய்க்காலுடன் மேற்குலகம் இணைக்கப்பட்டிருந்தது.

## புதினங்கள்

பீரிஸை வெளியுறவு அமைச்சராக்கியதற்கான ராஜதந்திர இலக்கு

பல வகுப்பறைகள் மரங்களுக்குக் கீழே நடக்கின்றன

ஊரான ஊரிழந்தோம்! ஒற்றைப் பனைத் தோப்பிழந்தோம்!!

Private: சொல்லப்படாத எங்கள் கதைகள்

தலைவர் பிரபாகரன் வீரச்சாவு குறித்து தொடரும் சர்ச்சை: காரணங்கள் எவை? கட்டுரைத் தொடர் - 17

முள்ளிவாய்க்கால் - மூச்சடங்கிய இறுதிக் கணங்கள்!

முள்ளிவாய்க்கால் படுகொலையின் தத்துவப் பின்னணி

கிழக்கில் கிடந்த பச்சைச் சூரியன்!

தேசியத் தலைவருக்கு விளக்கு வைக்கத் துடிக்கும் மார்க் அன்ரனிகள்

## செய்திகள்

Microsoft OLE DB Provider for ODBC Drivers

error '80040e37'

[Microsoft][ODBC SQL Server Driver][SQL Server]Invalid object name 'tblContents'.

/right-col-secindex.asp, line 132

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'பச்சை' என விழிக்கப்படும் skype இன் ஊடாக 'அப்பா' என இவர்களால் வாஞ்சையாக அழைக்கப்படும் கஸ்ரோ உரையாடிக் கொண்டிருந்தார்.

'நீங்கள் 10 இலட்சம் பேரும் வீதியில் இறங்கினால் யுத்தநிறுத்தம் வரும்' என கஸ்ரோ தனது உரையாடலில் வலியுறுத்துகிறார்.

ஜனவரி 2ம் திகதி, கிளிநொச்சி சிறிலங்கா படையினரிடம் வீழ்ச்சி அடையும்வரை, விடுதலைப்புலிகள் இயக்கத்தின் இராணுவ வியூகத்தினுள் சிறிலங்காப் படையினர் நன்கு சிக்குப்பட்டு வருகின்றனர் என்ற கருத்துத்தான் புலம் பெயர் தமிழ் மக்களிடம் மேலோங்கியிருந்தது.

இதனால், அதுவரை ஒரு சில அடையாள எதிர்ப்புப் போராட்டங்களும் கவனயீர்ப்புப் போராட்டங்களும் நடைபெற்றனவேயன்றி உயிர்ப்பான, எழுச்சிகரமான போராட்டங்கள் புலத்தில் பெரியளவில் நடைபெறவில்லை. கஸ்ரோவின் பொறுப்பிலிருந்த வெளிநாட்டுக் கிளைக் கட்டமைப்புக்களும் இத்தகைய போராட்டங்களைப் பெரியளவில் ஒழுங்கு செய்யவுமில்லை. ஊக்குவிக்கவுமில்லை.

களத்தில் சிறிலங்கா இராணுவத்தை வெற்றி கொள்ள வேண்டும் என்ற துடிப்போடு வெளிநாட்டுக் கிளைப் பணியாளர்கள் ஓடியோடி நிதி சேகரித்துக் கொண்டிருந்தனர்.

கிளிநொச்சியின் வீழ்ச்சியின் பின் நிலைமையில் மாற்றம் ஏற்படத் தொடங்கியது. யுத்தநிறுத்தம் ஒன்று இல்லாமல் இயக்கத்தையும் மக்களையும் பாதுகாக்க முடியாது என்பதனை விடுதலைப்புலிகள் இயக்கம் உணரத் தொடங்கியது. மக்கள் நலன் கருதி நிபந்தனையற்ற யுத்தநிறுத்தத்திற்கு தயாராக இருப்பதான நிலைப்பாட்டை எடுத்தது.

இதனால் மக்கள் நலன் கருதிய யுத்த நிறுத்தம் கோரி, போராட்டங்களை புலிகள் இயக்கத்தின் வெளிநாட்டுக் கிளைக் கட்டமைப்புகள் முன்னெடுக்கத் தொடங்கின.

இதற்கிடையில், ஜனவரி 2009 இல் பலஸ்தீனத்தின் காஸாப் பகுதி மீது இஸ்ரேல் இரு வாரத் தாக்குதல்களை நடாத்துகிறது. அதற்கெதிராக உலகின் பல பாகங்களிலும் இஸ்ரேலைக் கண்டித்துப் பெரும் மக்கள் போராட்டங்கள் இடம் பெறுகின்றன. பின்னர் அங்கு யுத்த நிறுத்தமும் வருகிறது.

இவற்றை வன்னிப் பகுதியிலிருந்து செய்மதித் தொலைக்காட்சி மூலம் கஸ்ரோ பார்வையிடுகிறார். காஸாப்பகுதியில் யுத்தநிறுத்தம் வந்ததற்கு மக்கள் போராட்டம் முக்கிய காரணம் என்ற முடிவுக்குப் போகிறார். இதனால் வெளிநாடுகளில் மக்கள் போராட்டங்களைத் தீவிரப்படுத்தினால், இங்கும் யுத்த நிறுத்தத்தினைக் கொண்டு வரமுடியும் எனத் திட்டமிடுகிறார்.

புலம் பெயர் நாடுகளில் மக்கள் போராட்டங்களைத் தீவிரமாக்குமாறு, தன்னால் வெளிநாட்டுக் கிளைகளுக்குப் பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்ட, தனது பிரிவுப் போராளிகளுக்கு கட்டளையிடுகிறார்.

வெளிநாட்டுக் கிளைக் கட்டமைப்புப் பணியாளர்களுக்கு தான் விடுத்த செய்தியிலும் மக்கள் போராட்டத்தால் காஸாப் பகுதியில் யுத்த நிறுத்தம் வந்ததையும் சுட்டிக் காட்டுகிறார்.

'ஏதாவது செய்து புலம்பெயர் நாடுகளை ஸ்தம்பிக்கச் செய்யுங்கள்' என, தனது பிரிவுப் போராளிகளுக்குத் தொடர்ச்சியாக கஸ்ரோ வலியுறுத்துகிறார்.

சிறிலங்காப் படையினரின் தாக்குதல்களால் கொல்லப்படும், காயப்படுத்தப்படும், இடம் பெயர்க்கப்படும் மக்கள் தொகை நாளுக்கு நாள் அதிகரிக்கத் தொடங்கியது. மக்கள் கொத்துக் கொத்தாக கொல்லப்படும் நிகழ்வுகள் அதிகரித்தன.

செய்மதித் தகவல் தொடர்பு வசதிகள் இயக்கத்திடம் இருந்தமையால், சம்பவங்கள் நிழற் படங்களாகவும் காணொளிகளாகவும் இணையத்தளங்கள் ஊடாக மக்களை வந்தடையத் தொடங்கின.

இப் பின்னணியில்; புலம்பெயர் நாடுகளில் மக்கள் போராட்டங்கள் எழுச்சியடையத் தொடங்குகின்றன. இப் போராட்டங்கள் பற்றி இத் தொடரில் பின்னர் நாம் நோக்குவோம்.

எழுச்சியடைந்து வரும் மக்கள் போராட்டத்தை சுட்டிக்காட்டி, யுத்த நிறுத்தம் வருமென பிரபாகரனுக்கு நம்பிக்கை கொடுக்க முயல்கிறார் கஸ்ரோ. பிரபாகரன் இதை நம்புவதாக இல்லை. 'எதற்காக அவர்கள் யுத்த நிறுத்தத்திற்கு இப்போது வரவேண்டும்' எனக் கேட்டு தனது நம்பிக்கையீனத்தை வெளிப்படுத்துகிறார்.

யுத்தநிறுத்தத்தை விட பாரிய இராணுவ வெற்றி மூலம் இராணுவத்தை பின்னடைவுக்குட்படுத்தி நிலைமைகளைச் சாதகமாக்குவதே பிரபாகரனின் விருப்பமாக இருந்தது. இருந்த போதும் கள யதார்த்தம் பாதகமாக அமைந்து வந்தமையால் யுத்தநிறுத்தக் கோரிக்கையும் அவசியமாக இருந்தது.

மேலும், கஸ்ரோ 1991 ஆம் ஆண்டு இடம் பெற்ற ஆனையிறவுச் சமரில் காயமுற்று, இடுப்புக்குக் கீழே இயக்கம் இழந்திருந்த ஒரு மூத்த போராளி. இதனால் அவர் மேல் பிரபாகரனுக்கு ஒரு வகை அனுதாபம் இருந்தது.

இதனால் கஸ்ரோவை மனந்தளரச் செய்ய பிரபாகரன் விரும்பவில்லை. 'எதற்கும் நீங்கள் முயன்று பாருங்கள்' என்று கஸ்ரோவின் முயற்சிக்குப் பச்சைக் கொடியும் காட்டுகிறார்.

மக்கள் பெருந்தொகையாகக் கொல்லப்படுவதனை முன்னிறுத்தி, மக்கள் போராட்டங்களைத் தீவிரப்படுத்தினால் யுத்த நிறுத்தம் வரும் என கஸ்ரோ நம்பினார். வேறு வழிகள் எதுவும் தென்படாமையும் அவரது நம்பிக்கைக்கு ஒரு காரணமாக இருந்தது.

இதனால் தான் 10.05.2009 அன்றைய உரையாடலிலும் 'நீங்கள் 10 இலட்சம் பேரும் வீதியில் இறங்கினால் யுத்தநிறுத்தம் வரும்' என கஸ்ரோ குறிப்பிடுகிறார்.

யுத்த நிறுத்தத்திற்கான மாற்றுவழிகள் ஏதாவது உண்டா என செயற்பாட்டாளர் ஒருவர் தயங்கித் தயங்கிக் கேட்கிறார்.

'இங்கிருந்து இப்படித் தான் எம்மால் யோசிக்க முடிகிறது' என்கிறார் கஸ்ரோ. புதிய யோசனைகள் எதுவும் கலந்து பேசப்படவில்லை. skype கூட்டமும் முடிவடைகிறது.

மக்கள் போராட்டம் மேலும் தீவிரமடைகிறது. ஆனால், யுத்தநிறுத்தம் மட்டும் வந்தபாடாய் இல்லை.

**15.05.2009. வெள்ளிக்கிழமை மாலை நேரம்.**

முள்ளிவாய்க்கால் பகுதியில் களமுனைக்குத் தலைமை தாங்கி நின்ற தளபதி சூசை மலேசியாவில் இருந்த விடுதலைப் புலிகளின் அனைத்துலக உறவுகள் பொறுப்பாளர் கேபியுடன் அவசர அவசரமாகத் தொடர்பு கொள்கிறார்.

*(அடுத்த சனிக்கிழமை (30.01.2010) தொடரும்.)*

1/22/2010 6:39:59 PM

www.tamilarangam.net

**உங்கள் கருத்துக்களை பதிவு செய்க:**

பெயர்

ஊர்

நாடு

மின்னஞ்சல்

கருத்து (max. 2000 characters)

அ Press F8 for English Powered by Quillpad

படத்தில் உள்ள எழுத்துக்களை பதிவு செய்க:

Change Image

Send Comment

## மேலும்


- தலைவர் பிரபாகரன் வீரச்சாவு குறித்து தொடரும் சர்ச்சை: காரணங்கள் எவை? கட்டுரைத் தொடர் - 17
- போராளிகள் குறித்து தலைவர் பிரபாவின் கவலை - தொடர் - 16
- புலிகளின் கடல்வழி விநியோக நுட்பங்கள்! கட்டுரைத் தொடர் - 15
- புலிகளின் மரபுப் போர்த் தகமை வளர்ந்தது எப்படி? கட்டுரைத்தொடர்- 14
- கிட்டுவை தமிழீழம் இழந்த கதை! கட்டுரைத் தொடர் - 13
- ராஜீவ் கொலைச் சம்பவம் ஏன் நிகழ்ந்தது? கட்டுரைத் தொடர் - 12
- சிறிலங்கா + தமிழீழம் = - இந்தியா: கட்டுரைத் தொடர் - பகுதி 11
- ஒஸ்லோ 'பிரகடனத்தை' புலிகள் ஏற்றார்களா? இல்லையா? பகுதி 10
- சிறிலங்கா - தமிழீழ முரண்பாட்டின் புவிசார் அரசியல் அடிப்படை- பகுதி 9
- இந்திய - தமிழீழ புவிசார் அரசியல் முரண்! ஈழம்: கட்டுரைத் தொடர் - 8


»மேலும் சுவடுகள்